# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1478/22 - 2007 ජනවාරි 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2007.01.04

*1478/22 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ், கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கண்டி மாநகர சபை உறுப்பினரொருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாக உள்ளதாதலாலும் ;

சேனக ஜயம்பதி சேனாநாயக்க என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆளொருவரை பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. பீ. எஸ். லீலானந்த குணசேகர என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது கண்டி மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் யூ. அமரதாஸ ஆகிய நான் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. பீ. எஸ். லீலானந்த குணசேகர என்பவர், கண்டி மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யூ. அமரதாஸ,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2006, பெப்புருவரி 20.

*1-322*